Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MAY 04, 2023

வியாழக்கிழமை மே 04, 2023 | ஒளி: 08 கதிர்: 263 | பக்கம்:06 | வடக்கு,கிழக்கு | Free

## ஏரிளம் அட்டைக்குத் தட்டுப்பாடு

■ ஏ.எச்.ஏ. ஹூஸைன்

கடந்த பல நாள்களாக அரச வங்கிகளில் புதிய ஏரிளம் அட்டைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக, புதிய ஏரிளம் அட்டைகளை தம்மால் பெறமுடியவில்லை என்று அரச வங்கிகளின் வாடிக்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். ஏரிளம் அட்டைகள் இல்லாத காரணத்தால் பாரம்பரிய



முறைப்படி வங்கிக்குச் சென்று வரிசையில் நின்று நேரடியாகவே பணத்தை மீளப் பெறவேண்டியுள்ளதாக வாடிக்கையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தொடர்ச்சி P2

வேட்புமனு தாக்கல் செய்தோர்

## வட்டாரத்துக்கு வெளியே வேலை

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்பாளர்களாக வேட்புமனு சமர்ப்பித்துள்ள அரச ஊழியர்களை, போட்டியிடும் வட்டாரத்துக்கு வெளியே இடமாற்றம் செய்து கடமையில் ஈடுபடுவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2



2.20 கோடி மக்களை பயங்கரவாதிகளாக புரியும் ஜனநாயக விரோத

# ஆணையை எதிர்ப்போம்

தற்போதைய பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்குப் பதிலாக புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை உருவாக்குவதன் மூலம் 2 கோடியே 20 இலட்சம் மக்களையும் பயங்கரவாதிகளாகப் புரிந்துகொள்ளும் ஜனநாயக விரோத ஆணையை எதிர்ப்பது பற்றிய பொதுவான புரிதலும் எங்களுக்கு உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி அரசியல் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன், நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து ஊடகப் பிரதானிகள் மற்றும் பத்திரிகை பிரதம ஆசிரியர்களுடனான கலந்துரையாடலொன்று கொழும்பு மெண்டரின் ஹோட்டலில் புதன்கிழமை (03) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

## ஜூலையில் மின் கட்டண திருத்தம்



2023ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்குள் மின்சார கட்டணம் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, புதன்கிழமை (03) தெரிவித்தார்.

ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் மின் கட்டணத்தை மீளாய்வு செய்து திருத்தவும் செலவை பிரதிபலிக்கும் விலைச் சூத்திரத்தை நடைமுறைப்படுத்தவும் 2022 டிசெம்பரில் எடுக்கப்பட்ட அரசாங்க கொள்கை மற்றும் அமைச்சரவை முடிவுகளுக்கு இணங்கவே இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

சிலிண்டர் விலைகளை

## குறைத்தது லிட்ரோ; லா:.ப்ஸ் மாற்றமில்லை



எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை புதன்கிழமை (03) நள்ளிரவு முதல் அமலாகும் வகையில் குறைப்பதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ள நிலையில், உள்நாட்டு எரிவாயு விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று லாஃப்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



சுவிஸ் தூதரக ஊழியர் கடத்தல் விவகாரம்

## குற்றப்பத்திரத்தை திருத்த அனுமதி

2019ஆம் ஆண்டு வெள்ளை வாகனத்தில் கடத்தப்பட்டு, பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதாக பொய்க் குற்றச்சாட்டை முன்வைத்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் ஊழியர் கனியா பனிஸ்டர் பிரான்சிஸுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையை திருத்துவதற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலேல்ல சட்டமா அதிபருக்கு, புதன்கிழமை (03) அனுமதி வழங்கினார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி ரணில் பிரித்தானியா பயணம்



பிரித்தானியாவின் மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் முடிசூட்டு விழா வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் மே 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதில் பங்கேற்பதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதன்கிழமை (03) இரவு பிரித்தானியாவுக்கு புறப்பட்டுச் சென்றார்.



## நிர்மலா சீதாராமனை சந்தித்தார் அலி சப்ரி

தென் கொரியாவில் நடைபெற்று வரும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 56ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை, புதன்கிழமை (03) சந்தித்து கலந்துரையாடினார்.

தொடர்ச்சி P2



சின்னத் தேர்தல் ஒத்திவைப்பு

## மனுவை ஜூன் 9 அன்று பரிசீலிக்க தீர்மானம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்துமாறு உத்தரவிடக் கோரி தேசிய மக்கள் சக்தியால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை, எதிர்வரும் ஜூன் மாதம் 9ஆம் திகதி பரிசீலிப்பதற்கு உயர்நீதிமன்றம், புதன்கிழமை (03) தீர்மானித்தது.

தொடர்ச்சி P2



## போக்குவரத்து தடை

பசறை –நமுனுகுல 12 ஆம் கட்டைப் பகுதியில் பாரிய மண்மேடும் கற்களும் சரிந்து வீதியில் வீழ்ந்துள்ளமையால் எல்ல–பசறை வீதி போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

ராமு தனராஜா

## ஹிங்குராக்கொடயில் சர்வதேச விமான நிலையம்



ஹிங்குராக்கொட விமான நிலையத்தை சர்வதேச சிவில் விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளதாக விடயதான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



நானுஓயா எடின்பரோ தோட்டத்தில்

## காலாவதியான 200 கிலோ கோதுமை மா மீட்பு

■ டி.சந்ரு

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா எடின்பரோ தோட்டத்தில், தோட்டத் தொழிலாளிகளுக்கு வழங்குவதற்கு வைத்திருந்ததாக கூறப்படும் காலாவதியான 200 கிலோ கிராம் நிறையுடைய கோதுமை மா, நானுஓயா சுகாதார பரிசோதகர்களால் மீட்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

விண்ணப்ப கால அவகாசம்

## இன்று நள்ளிரவு வரை நீடிப்பு



க.பொ.த உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக ஆசிரியர்களிடம் இருந்து இணைய முறையில் விண்ணப்பங்களை கோருவதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பிறந்தமேனியுடன் அலறிய பெண் மீட்பு

கம்பளை, அம்புலுவாவ சரணாலயத்தில் மூன்று நாள்களாக நிர்வாணமாக அலறிக் கொண்டிருந்த பெண் ஒருவரை, கம்பளை தலைமையக பொலிஸார், புதன்கிழமை (03) கண்டுபிடித்து வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

மக்களின் வாய்ப்புகளை

## பகிர்ந்தளிப்பதில் அரசியல் பாகுபாடு கிடையாது

### தமிழ் பிரதிநிதிகளிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு




மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசியல் வேறுபாடு கிடையாது என்றும் மக்களுக்கு கிடைக்கின்ற இவ்வாறான வாய்ப்புகளை பகிர்ந்தளிப்பதில் தமக்கு அரசியல் பாகுபாடு கிடையாது என்றும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதற்கான ஆலோசனைகளையும் முன்மொழிவுகளையும் மக்கள் பிரதிநிதிகள் வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பேபிகளுக்கு ‘கருமபீடம்’

பெற்றோர் தமது குழந்தைகளை சாலைகளில் கைவிட்டுச் சென்ற அறுபது சம்பவங்கள் நாடளாவிய ரீதியில் கடந்த வருடம் பதிவாகியுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தைப் பிரிவு ஆணையாளர் என். ஐ லியனகே தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## ஆயிரம் மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில்

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றி, முதல் அமர்விலேயே சித்தி பெற்று க.பொ.த உயர்தரத்திற்கு தெரிவான மாணவ மாணவியருக்கான புலமைப்பரிசில் வழங்கல் 2023 நிகழ்வு, ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் புதன்கிழமை (03) நடைபெற்றது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## வட்டாரத்துக்கு வெளியே...

அரச பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் தினேஷ் குணவர்த்தன சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. வேட்புமனு சமர்ப்பித்துள்ள அரச ஊழியர்கள் தொடர்பாக தேர்தல் நடத்தப்படும் வரைக்கும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தேர்தல் ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புகளைக் கருத்தில் கொண்டு இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

அவ்வாறான அரச உத்தியோகத்தர்கள் தாம் வேட்பாளர்களாக தேர்தலில் போட்டியிடவுள்ள தேர்தல் வட்டாரத்தில் அமைந்துள்ள அரச பகுதி அரச நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டிருப்பின், அவர்கள் மீண்டும் கடமைக்கு சமூகமளிப்பதற்கு இயலுமாகும் வகையில் குறித்த தேர்தல் வட்டாரத்துக்கு வெளியே இடமாற்றம் செய்து கடமையில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காக இந்த யோசனை முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## குறைத்தது லிட்ரோ: லாஃப்ஸ்...

12.5 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை, 100 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் 5 மற்றும் 2.3 கிலோ கிராம் சிலிண்டர்கள் முறையே 40 மற்றும் 21 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

அதற்கமைய 3,738 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் புதிய விலை 3,638 ரூபாயாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 1,502 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,462 ரூபாயாகவும் 700 ரூபாயாக இருந்த 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 681 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட விலைகள் கொழும்பு மாவட்டத்துக்கு பொருந்தும் என்றும் ஏனைய மாவட்டங்களின் தூரங்களுக்கு ஏற்ப விலைகள் வேறுபடும் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, குளோபல் எல்.பி எரிவாயு சந்தையில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பு காரணமாக உற்பத்தி மற்றும் விநியோகச் செலவுகள் அதிகரித்துள்ளதாகவும் உள்நாட்டு எரிவாயு விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்றும் லாஃப்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. தமது வாடிக்கையாளர்களுக்கு சிக்கல்களுக்கு மத்தியிலும் நியாய விலையில் எரிவாயு வழங்குவதாக குறித்த நிறுவனம் புதன்கிழமை (03) வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

## நிர்மலா சீதாராமனை...

இரு தரப்பு உறவுகள் மற்றும் பொருளாதார பங்களிப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது என்று தென்கொரியாவில் உள்ள இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது.

## காலாவதியான 200...

தோட்ட தொழிலாளர்களுக்கு கிடைத்த தகவலின்படி அனைத்து எடின்பரோ தொழிலாளர்களும் ஒன்றினைந்து தேயிலை தோட்டத்தொழிற்சாலையின் நுழைவாயிலுக்கு அருகே இருந்து தோட்ட நிர்வாக அதிகாரிகளிடம் முரண்பட்டுக் கொண்டிருந்தனர்.

இதனை அடுத்து நானுஓயா பொலிஸாருக்கும் நானுஓயா சுகாதார பரிசோதருக்கும் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே தோட்டத்தின் களஞ்சியசாலையிலிருந்து 200 கிலோ கிராம் கோதுமை மா மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குறித்த தோட்ட முகாமையாளர் குறிப்பிடுகையில், "காலாவதியான கோதுமை மா இருந்தமை உண்மைதான். ஆனால், அவை தோட்டத் தொழிலாளர்களுக்கு விநியோகம் செய்யவில்லை. தொழிற்சாலையின் களஞ்சியசாலையில் காலாவதியான பொருட்கள் வைத்திருந்த இடத்திலேயே இந்த நான்கு மூட்டைகள் அடங்கிய 200 கிலோ கிராம் கோதுமை மாவை வைத்திருந்தோம்" என்றார்.

"தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதம் ஒருமுறை வழங்கும் கோதுமை மா, சுத்தமான ஒதுக்குப்புறமான களஞ்சியசாலையில் புதிய விளம்பர அறிவித்தல்கள் ஒட்டப்பட்டும், காலாவதியாகும் திகதிகள் பொறிக்கப்பட்டும் தனியான அறையில் வைத்திருக்கின்றோம்" என தெரிவித்தார்.

# ஆணையை எதிர்ப்போம்

குறித்த கலந்துரையாடலில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், "இன்று (நேற்று) சர்வதேச ஊடக தினம். இத்தகைய சிறப்புமிக்க வரலாற்று நாளில், எதிர்க்கட்சிகளில் பல முக்கிய அரசியல் கட்சிகள், உங்களுடன் சமூக-பொருளாதார அரசியல் உரையாடலைத் தொடங்கியுள்ளதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்,

குறிப்பாக, நம் நாட்டின் ஜனநாயகத்தின் முக்கிய 3 தூண்கள் நிறைவேற்றுநர், சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை ஆகும். 4 ஆவது முக்கிய தூண் சுதந்திர ஊடகம். நீங்கள் ஆற்றிய வரலாற்றுப் பணியின் மதிப்பீடு இந்த ஊடகத் துறையை ஒன்றிணைத்து முற்போக்கான உரையாடல் கருத்துப் பரிமாற்றம் இந்தத் தருணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, வெவ்வேறு அரசியல் கட்சிகளில் ஒவ்வொரு கட்சியும் தனித்துவமான சிந்தனைகளைக் கொண்டுள்ளன. கோட்பாடுகள் உள்ளன. ஆனால், இன்று தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்களில் ஒன்றுபடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

உதாரணத்துக்கு, ஊடகக் கட்டுப்பாட்டுக்காக அரசாங்கம் இன்று தயாரிக்கும் ஒலிபரப்பு அதிகாரசபைச் சட்டத்தைக் குறிப்பிடலாம். அதன் மூலம் ஊடகங்க சுதந்திரத்தின் மீது பாயவுள்ள மரண அடியை எதிர்ப்பது பற்றி எமக்கு பொதுவான கருத்து உள்ளது.

மேலும், தற்போதைய பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்குப் பதிலாக, புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை உருவாக்குவதன் மூலம் 2 கோடி 20 இலட்சம் மக்களையும் பயங்கரவாதிகளாகப் புரிந்துகொள்ளும் ஜனநாயக விரோத ஆணையை எதிர்ப்பது பற்றிய பொதுவான புரிதலும் எங்களுக்கு உள்ளது.

மேலும், சமீபகாலமாக இந்த நாட்டில் நடந்த மிகப்பெரிய சுற்றுச்சூழல் பாதிப்பான 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' நிகழ்விலும், ஒரு வங்குரோத்தான நாட்டில் அவ்வாறான மாபெரும் பேரழிவிலும் பணத்தை சுரண்டும் முயற்சியை முறியடிக்கவும், அரசின் மிகவும் பிற்போக்குத்தனமான வேலைத்திட்டத்தை முறியடிக்கவும் எதிர்க்கட்சியான நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம். இவை ஒரு சில மட்டுமே.

பொது விவகாரங்களில் பல விடயங்களில் நாங்கள் ஓர் இடத்திற்கு வந்துள்ளோம்.

முதலில், இந்த நேரத்தில் அனைவரையும் மரியாதையுடன் வரவேற்கிறேன். இன்று, எதிர்க்கட்சிகளின் பல்வேறு அரசியல் கட்சிகளிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவாக, நாட்டிற்கு மதிப்பு சேர்க்கும் வகையில் உங்கள் அனைவருடனும் ஒரு முற்போக்கான உரையாடலில் ஈடுபடவுள்ளோம்.

இந்த முற்போக்கு உரையாடல் மூலம் நாடு மதிப்பு பெற்று உலகின் அனைத்து துறைகளிலும் நம்பர் 1 நாடாக உருவாக வேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன்" என்றார்.

இதேவேளை, அரசாங்கத்தால் அமல்படுத்தப்படும் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக, பல எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பாரிய சக்தியாக செயற்பட ஆரம்பித்ததன் விளைவாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தற்போதைய அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் தன்னிச்சையான வேலைத்திட்டத்துக்கு எதிராக, எதிர்க்கட்சிகளின் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து பொதுவான வேலைத்திட்டத்தை உருவாக்குவதற்காக ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிக் குழுக்கள் பல அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியது.

## மனுவை ஜூன்...

புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட, காமினி அமரசேகர ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே குறித்த திகதி அறிவிக்கப்பட்டது.

மேலும், மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாததன் மூலம் சர்வஜன வாக்குரிமை உள்ளிட்ட அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கக் கோரி கடந்த மார்ச் 14ஆம் திகதி குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன, சட்டமா அதிபர், தேசிய தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சிலர் குறித்த மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

## இன்று நள்ளிரவு...

செவ்வாய்க்கிழமை (02) நள்ளிரவுடன் நிறைவடையவிருந்த கால அவகாசம், இன்று (04) நள்ளிரவு 12 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் 12 பாடங்களுக்கான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக விண்ணப்பிப்பதற்கு ஆசிரியர்களுக்கு தொடர்ந்தும் வாய்ப்பு காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்

அதற்கமைய பௌதீக விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம், கணிதம், விவசாய விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், இணைந்த கணிதம், தொடர்பாடல் மற்றும் ஊடகக்கற்கை, வர்த்தகக் கல்வி, பொறியியல் தொழில்நுட்பம், உயிரியல் முறைமைகள் தொழில்நுட்பம், தொழில்நுட்பமும் விஞ்ஞானமும் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

## பிறந்தமேனியுடன் அலறிய பெண் மீட்பு

சுமார் மூன்று நாள்களாக வனப்பகுதியில் அவ்வப்போது பெண் ஒருவர் அலறும் சத்தம் கேட்டதாக தெரிவித்த உள்ளூர்வாசிகள், குறித்த வனப்பகுதிக்குள் சென்று ஆராய்ந்தனர். அப்போது ஒரு பெண் உடலில் ஆடை இல்லாமல் இருப்பதைக் கண்ட பிரதேசவாசிகள் கம்பளை தலைமையக பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

கம்பளை தலைமையக பொலிஸாரின் பெண் உத்தியோகத்தர்கள் குழுவொன்று வந்து அந்த பெண்ணுக்கு ஆடை அணிவித்து அதிகாரிகளின் காவலில் எடுத்துச் சென்றுள்ளனர்.

## பகிர்ந்தளிப்பதில் அரசியல்...

கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் புதன்கிழமை (03) இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரா அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் - கிளிநொச்சி மாவட்ட எம்.பிக்களும் கலந்து கொண்ட குறித்த கூட்டத்தில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

வடக்கு மாகாணத்தினை சேர்ந்த கடற்றொழிலாளர்களின் தொழில்சார் முன்னேற்றங்களுக்காக 1,650 மில்லியன் ரூபாய்களை வழங்குவதற்கு ஜப்பான் முன்வந்திருப்பதாகவும், அதேபோன்று வடக்கு கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கான வீடமைப்பு மற்றும் வாழ்வாதார உதவிகளுக்காக சீனா 1500 மில்லியன் ரூபாய்களை வழங்க முன்வந்துள்ளதுடன் இந்தியாவும் பல்வேறு ஒத்துழைப்புக்களை வழங்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், எமது மக்களுக்கு கிடைக்கின்ற இவ்வாறான வாய்ப்புக்களை பகிர்ந்தளிப்பதில் அரசியல் பாகுபாடு கிடையாது என்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அச்சுறுத்தலாக காணப்படும் சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் போதைப் பொருள் பயன்பாடு தொடர்பாக ஆராயப்பட்டதுடன், குறித்த விடயம் தொடர்பாக விசேட கூட்டம் ஒன்றினை நடத்தி விரிவாக ஆராய்ந்து உறுதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் கூட்டத்தில் தீராமானிக்கப்பட்டது.

அதேபோன்று மாவட்டத்தில் காணப்படுகின்ற காணிப் பிரச்சினைகள், நீர்ப்பாசணம் சார்பான ஒழுங்குபடுத்தல்கள், கிளிநொச்சி நகர அபிவிருத்தி திட்டம் போன்ற பல்வேறு விடயங்களும் ஆராயப்பட்டதுடன், சில விடயங்களுக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியும் வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். கஜேந்திரன், எஸ். ஸ்ரீதரன், எம். ஏ. சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டதுடன், மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட அரச அதிகாரிகளும், அரசாங்க திணைக்களங்களின் நிறைவேற்று அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஏரிஎம் அட்டைக்குத் தட்டுப்பாடு

இதனால் நேர விரயமும் அலைச்சலும் மன உளைச்சலும் ஏற்படுவதாக வாடிக்கையாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

அரச வங்கிகளில் புதிய ஏரிஎம் அட்டைகளோ அல்லது காலாவதியான அட்டைகளுக்குப் பதிலான அட்டைகளோ இப்பொழுது பெற முடியாத நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜூலையில் மின்...

மேலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கான கட்டணத்தை கணக்கிடுவதற்காக புதிய சூத்திரத்தை பின்பற்றுவதற்கு இலங்கை மின்சார சபைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மின்சக்தி மற்றும் வலுச்சக்தி துறையில் புதிய முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் இது அமைந்துள்ளது என்றும் அமைச்சர் காஞ்சன தெரிவித்தார்.

## குற்றப்பத்திரத்தை திருத்த...

2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி அல்லது அண்மித்த காலப்பகுதியில் கொழும்பு, கறுவாத் தோட்டம் பகுதியில் வைத்து வெள்ளை வாகனத்தில் வந்த ஐவர், தன்னைக் கடத்திச் சென்று துப்பாக்கி முனையில் மிரட்டி பல மணிநேரம் தடுத்து வைத்ததாக கறுவாத் தோட்டம் பொலிஸில் முறைப்பாட்டை கனியா பனிஸ்டர் பதிவு செய்தார்.

எனினும், மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் பொய்யான சாட்சியங்களை சோடனை செய்ததாக கனியா பனிஸ்டர் மீது சட்டமா அதிபர் குற்றப்பத்திரம் தாக்கல் செய்திருந்தார்.

இலங்கை அரசை தர்மசங்கடத்தில் ஆழ்த்துவதற்காக பொய்யான தகவல்களை வழங்கியதாகவும், தனது கடத்தல் குறித்த விடயத்தில் பொய்யான ஆதாரங்களை உருவாக்கியதாகவும் கனியா பன்னிஸ்டர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## ஹிங்குராக்கொடயில் சர்வதேச...

ஹிங்குராகொட விமான நிலையத்தை சர்வதேச சிவில் விமான நிலையமாக மாற்றுவதன் மூலம் பொலன்னறுவை, அநுராதபுரம், சிகிரியா மற்றும் தம்புள்ளை ஆகிய இடங்களுக்கான விஜயங்களை இலகுவாக்க முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சின் கேட்போர் கூடத்தில் புதன்கிழமை (03) இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்குறிப்பிட்ட விடயங்களை தெரிவித்தார்.

குறித்த விமான நிலையத்தின் நிர்வாகமும் செயற்பாடுகளும் தற்போது இலங்கை விமானப்படையின் கீழ் காணப்படுவதாக குறிப்பிட்ட அமைச்சர், ஏ 330 விமானங்களின் தரையிறக்கம் மற்றும் புறப்பாட்டுக்காக விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யவதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள கள ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்றார்.

இந்த வரலாற்று, இயற்கை மற்றும் கலாசார தலங்களுக்கு அதிக சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதன் மூலம் அந்நிய செலாவணி வருவாயை அதிகரிப்பதே நோக்கம் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அந்த விமான நிலையத்தின் தற்போதைய 2,287 மீற்றர் ஓடுபாதையை 2,800 மீற்றர் வரை நீட்டித்து, விமான நிலைய ஓடுபாதைக்கான அணுகல் பாதையை அமைப்பதற்கும் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு கோபுரம் மற்றும் பயணிகள் முனையம் ஆகியவற்றையும் அமைக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பேபிகளுக்கு 'கருமபீடம்'

ஆகையால் வளர்க்க முடியாத மூன்று மாதங்களுக்கும் குறைவான சிசுக்களை பராமரிக்க மாகாண ரீதியிலான கருமபீடங்களை நிறுவ முடிவெடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த நடவடிக்கையை அமல்படுத்துவதற்கான சட்டங்கள் இயற்றப்பட்டு வருவதாக திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை பல்வேறு காரணங்களால் 80 சிறுவர்கள் குறித்த காலத்தில் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை ஆணையாளர் தெரிவித்தார்.

குழந்தைகளைப் பொறுப்பேற்கும் குறித்த கருமபீடங்களில் சிசுக்களைக் ஒப்படைக்கும் பெற்றோர் மீது சட்ட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட மாட்டாது எனவும் இந் நடவடிக்கைக்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் கையளிக்கப்படும் எனவும் லியனகே மேலும் தெரிவித்தார்.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, நீதி அமைச்சு மூலம் இப்புதிய சட்டங்கள் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

# ஆயிரம் மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில்

புலமைப்பரிசில் வழங்குவதற்கான மேற்படி திட்டத்தினை ஜனாதிபதி நிதியம் மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து முன்னெடுக்கின்றன.

அதற்கமைய, 2022 ஆம் ஆண்டில் க.பொ.த சதாரண தர பரீட்சை பெறுபேறுகளுக்கமைய 2024 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரத்துக்கு தகுதி பெற்ற 3,000 மாணவ மாணவியருக்காக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதோடு, இதற்காக நாடு முழுவதிலுமுள்ள 100 வலயக் காரியாலயங்களை உள்ளடக்கியதாக வலயமொன்றிற்கு 30 என்ற அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**" க.பொ.த உயர்தரத்திற்கு தகுதிபெற்ற மாணவர்களுக்கு உயர்கல்வியை நிறைவு செய்யும் இரு வருட காலப்பகுதிக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படவுள்ளது**

புலமைபரிசில் வழங்கலின் அடையாள ரீதியாக மேல்மாகாணத்தின் 11 கல்வி வலயங்களில் சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய 110 மாணவர்களுக்கு ஜனாதிபதியால் புலமைப்பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன் கீழ் புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொண்ட ஒருவருக்கு க.பொ.த உயர்தரத்திற்கு தகுதிபெற்ற மாணவர்களுக்கு உயர்கல்வியை நிறைவு செய்யும் இரு வருட காலப்பகுதிக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படவுள்ளதோடு அதற்காக 360 மில்லியன் ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒகஸ்ட் 1ஆம் திகதியில் இருந்து

# மீற்றர் இன்றி ஓட முடியாது

யாழ். மாவட்டத்தில் ஒகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து கட்டணமானி (மீற்றர்) பொருத்தாக ஓட்டோக்கள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டாது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆ. சிவ பாலசுந்தரன் தெரிவித்தார்,

மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் வாடகைக்கு செலுத்தும் ஓட்டோக்களுக்கு கட்டண மீற்றர் பொருத்தாமையால் ஓட்டோக்களுக்கான கட்டணங்கள் அதிகளவில் வசூலிக்கப்படுவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் இருக்கின்றன.

இது தொடர்பில் முக்கிய




கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில், வாடகை ஓட்டோ வண்டி ஓட்டுநர்கள் சம்பந்தமான பலவிடயங்கள் ஆராயப்பட்டன. பொருத்தமற்ற அளவுக்கதிகமான ஒலிகளை எழுப்பி செல்லுவது, அநாவசியமான கண்ணாடிகள் பொருத்தி இருப்பது, தேசிய கொடியை அவமதிக்கும் வகையிலே கிழிந்த, மாசு படிந்த வாகனங்களுக்கு பொருத்தமற்ற அளவிலான தேசிய கொடிகளை பொருத்துதல் போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன.

குறிப்பாக, பயணிகள் அச்சப்படும் அளவிற்கு பயணிகள் மட்டுமல்லாது வீதிகளில் பயணிப்போர் அச்சப்படும் அளவிற்கு உயர்ந்த மிகையொலிகளை எழுப்புகின்ற கருவிகளை ஓட்டோ வண்டிகளில் பொருத்துவது தடுக்கப்பட வேண்டும்.

அதுபோல வாடகை ஓட்டோ வண்டியைச் செலுத்துபவர்கள் மரியாதைக்குரிய ஆடைகளை அணிந்து, நல்ல பழக்க வழக்கங்களை கொண்டிருக்க வேண்டும் போன்ற விடயங்கள் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டன.

இந்த விடயங்களுக்கு சம்பந்தப்பட்ட ஓட்டோ வண்டி சங்கத்தினர் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்திருந்தார்கள். அதனடிப்படையில், மீற்றர் பொருத்தாத ஓட்டோ வண்டிகள் சேவையில் ஈடுபட ஒகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து அனுமதிக்கப்பட மாட்டாது என்றார்.

## தங்கப் பதக்கம் வென்றார்



கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஊடாக நடத்தப்பட்ட விஞ்ஞான வினா-விடைப் போட்டியில் அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் கல்வி பயிலும் மாணவி எம்.ஐ.எப். இப்பத், ஆங்கில மொழி மூலப் போட்டியில் தங்கப் பதக்கத்தை பெற்றுள்ளார். அந்த மாணவியை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் புதன்கிழமை (03) நடைபெற்றது.

## நிலக்கடலை அறுவடை

எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார், நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இசைமாளத்தாழ்வு கிராமத்தில் பொதுமக்கள், தனியார் கூட்டு உற்பத்தி திட்டத்தின் மூலம் செய்கை பண்ணப்பட்ட நிலக்கடலை பயிர் செவ்வாய்க்கிழமை (02) அறுவடை செய்யப்பட்டது.

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் பங்கேற்போடு அறுவடை செய்யப்பட்டது.

நாட்டின் சம கால பொருளாதார நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, விவசாயத்தைத் தமது ஜீவனோபாயத் தொழிலாக முன்னெடுத்து வரும் குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் வேண்டுகோளின் பெயரில் ILO நிறுவனத்தால் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அறுவடை மூலம் பெறப்பட்ட நிலக் கடலையை உரிய முறையில் பிரித்து எடுத்து, பதப்படுத்தும் இயந்திரம் ஒன்றும் குறித்த பகுதி கமக்கார அமைப்புகளிடம் இராஜாங்க அமைச்சர் கையளித்தார்.



## சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாலயம் சாதனை

மு.தமிழ்ச்செல்வன்

மதர் ஸ்ரீலங்கா நிறுவனம், கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலை மதர் ஸ்ரீலங்கா கழகங்களுக்கிடையே சமூக பொறுப்பு, ஐக்கியம், திறன்விருத்தி ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் நடத்திய போட்டியில் சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாலயம் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

வெற்றி பெற்றவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வானது, வெள்ளிக்கிழமை (28) அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதன்போது பிரதமர் தினேஷ் குணவர்த்தன, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, 3 மில்லியன் ரூபாய் செலவில் கணினி ஆய்வுகூடமும் அமைத்து வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இப்போட்டியில் குறித்த பாடசாலை மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையின் நடன ஆற்றுகையும் இந்நிகழ்வில் இடம்பெற்றது. மேலும் சிறப்பாகச் செயற்பட்ட கழகத்துக்கான விருது தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு வழங்கப்பட்டது.

## கோதுமை மாவில் எலிகளின் கழிவுகள்

### தோட்ட தொழிலாளர்கள் போராட்டம்

துவாரகஷான்



நுவரெலியா, நானுஓயா, எடின்பரோ தோட்டத்தைச் சார்ந்த 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேற்றைய தினம் (03) தேயிலை தொழிற்சாலைக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த வாரம் தோட்ட தொழிலாளர்களுக்கு, தோட்ட நிர்வாகத்தால் வழங்கப்பட்ட கோதுமை மாவில் பூச்சி, வண்டு, எலிகளின் கழிவுகள் காணப்பட்டமையைக் கண்டித்தும் 300 கிலோ கிராம் கோதுமை மா தொழிலாளர்களுக்கு வழங்காமல், களஞ்சியசாலையில் வைத்திருந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, தோட்ட நிர்வாகம், தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை வழங்காது, கொழுந்து பறிப்பதில் மாத்திரம் தொழிலார்களுடன் கடுமையாக நடந்து கொள்வதாகவும், இங்கு பறிக்கப்படும் கொழுந்துகள் வேறு தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுவதாகவும், தமக்கு இதுவரை சுகாதார வசதி மற்றும் ஏனைய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை எனவும், அத்தோடு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வை தோட்ட அதிகாரி வழங்குவதில்லை எனவும் தோட்டத் தொழிலாளர்கள் கவலை தெரிவித்தனர்.

அத்துடன், இது குறித்து தோட்ட அதிகாரியிடம் மக்கள் கலந்துரையாடிய போதிலும் அவர் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை எனக்கூறிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'காரிகை கனவு' கௌரவிப்பு நிகழ்வு



எம்.எம்.அஹமட் அனாம்

வாழைச்சேனை வளம்சேர் வாழையூர் கலைச் சங்கமத்தின் ஏற்பாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'காரிகை கனவு' எனும் தொனிப் பொருளிலான கௌரவிப்பு நிகழ்வும், அழகுக்கலை நிகழ்வும், பேத்தாழை குகணேசன் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

வாழைச்சேனை வளம்சேர் வாழையூர் கலைச் சங்கமத்தின் தலைவர் திருமதிஜெயராணி யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான சி.சந்திரகாந்தன் கலந்துகொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதிகலாமதி பத்மராஜா, வாழைச்சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி கே. அமலினி, மட்டக்களப்பு கல்வி வலய கல்வி பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், பேத்தாழை விபுலானந்தா கல்லூரி அதிபர் எஸ். முருகவேல், கல்குடா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்திரகுமார, வாழைச்சேனை மக்கள் வங்கி முகாமையாளர் ஜி.பி பிரகாஸ், உடற்கல்வி பிரதி கல்வி பணிப்பாளர் கே.சுபாஸ்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மாணவிகளிடம் அங்க சேஷ்டை; அதிபர் கைது

பஸ்ஸில் பயணிக்கும் போது, தன்னுடைய கைப்பையைக் கொண்டு மறைத்து, மாணவிகளின் மார்பகங்கள், தொடைகளை வருடினார் என்ற குற்றச்சாட்டின் கீழ், அதிபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பளை கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 14, 15 வயதுடைய மாணவிகளிடமே குறித்த அதிபர் இவ்வாறு பாலியல் சேஷ்டையைக் காண்பித்துள்ளார். 52 வயதான அதிபர், கலஹா பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் என்றும் அவருடைய மனைவியும் ஆசிரியை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்விரு மாணவிகளின் வாக்குமூலங்கள் மற்றும் நேரில் பார்த்த மாணவர்களின் சாட்சியங்களின் அடிப்படையில், அந்த அதிபர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அந்த அதிபருக்கு எதிராக, கல்வி வலயத்தின் ஊடாக ஒழுக்காற்று விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



## சான்றிதழ் வழங்கும் விழா

UNDP அனுசரணையில் அமல்படுத்தப்படும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் திறன் விருத்தி செயற்றிட்ட (CDLG) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆறு மாத கால நிதி முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கி வைக்கும் விழா, திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (02) இடம்பெற்றது.

APFA ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைவர் வி.கணகசபாவதி தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

## 'அடம் பிடிக்கிறது ஹைக்கூ'

எம்.செல்வராஜா

இயஸ் வி கென் பௌன்டேஷன் (YES WE CAN FOUNDATION) பெருமிதத்தோடு வழங்கிய 'அடம் பிடிக்கிறது ஹைக்கூ' மடுல்சீமையூர் இரம்மியனின் கவிதை நூல் வெளியீட்டு விழா, பசறை பிரதேச சபை நூலக கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை (27) நடைபெற்றது.

மலையக சிரேஷ்ட எழுத்தாளர் மு. சிவலிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அ. நவரத்தினம், இயஸ் வி கென் பௌன்டேஷன் இன் ஆலோசகரும் சட்டத்தரணியுமான மோகனதாஸ் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்திருந்தனர்.



## பொதுக்கூட்டம்

ராமு தனராஜா

பசறை கல்வி வலயத்திற்கு உட்பட்ட பது/ கோணக்கலை தமிழ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் வருடாந்த பொதுக்கூட்டம் மே 5 ஆம் திகதி பாடசாலை அதிபர் சந்தனம் ராஜேந்திரா தலைமையில், வித்தியாலய பிரதான மண்டபத்தில் காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

## கள விஜயம்



எம். எஸ். எம். நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தும் நோக்கில், டெங்கு கள விஜயம் முன்னெடுக்கப்பட்டது.

காத்தான்குடி பிரதேசத்தில் பிரதேச செயலாளர் உதய சிறீதரின் வழிகாட்டலின் கீழ், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அதில் இணைந்திருந்தனர்.

புதிய காத்தான்குடி, அன்வர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவு, பதுறியா, நூறாணியா போன்ற பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது.

# ஜனநாயகத்தின் நான்காவது தூணை பலப்படுத்துவது அவசியம்

தனக்கு மேலிருக்கும் நிறைவேற்று, சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று தூண்களின் செயற்பாடுகளையும் கழுகுக் கண்கொண்டு பார்த்து, மக்களுக்கு அறிவித்து, அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகளை விமர்சித்து, நேரடியான உறவுப்பாலமாய் இருப்பதுதான் ஊடகமாகும். இதைத்தான் ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்பர்.

உலகநாடுகளின் வரலாற்று நிகழ்வுகளைப் பொறுத்தவரையில், ஊடக சுதந்திரம் கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. யுத்தம் இடம்பெறும் நாடுகளிலும், அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் வலுக்கும் நாடுகளிலும் ஊடகச் சுதந்திரத்தை எதிர்ப்பார்ப்பது கடினமாகும்.

அரசியல் நெருக்கடி தொடருமாயின் அங்கு ஊடக சுதந்திரம் பாதிக்கப்படும் என்பது மட்டுமே உண்மை.

உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு, பத்திரிகை மற்றும் ஊடகத்தின் பயன்பாடு என்பது அளவிடற்கரியது. உலக மக்களை இணைக்கின்ற மிகப் பெரிய பாலமாக பத்திரிகை மற்றும் ஊடகம் விளங்குகின்றன என்பது தனிச்சிறப்பு. இந்நிலையில், உலக பத்திரிகை சுதந்திர தினம், மே மூன்றாம் திகதி திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.

கொலம்பியப் பத்திரிகையாளர் கிலெர்மோ கானோ இசாசா, 1986 டிசெம்பர் 17 இல் அவரது அலுவலகம் முன்பாக வைத்துப் படுகொலை செய்யப்பட்டார். அவரின் கொலையின் பின்னரே பத்திரிகை சுதந்திரம் தொடர்பான பேச்சு, உலகம் முழுவதும் வலுப்பெற்றது.

உலக பத்திரிகையாளர்களின் தொடர் முன்னெடுப்புகள் காரணமாக, 1993இல் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏற்று கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், ஒவ்வோர் ஆண்டும் மே மாதம் மூன்றாம் திகதி பத்திரிகை சுதந்திர நாள் முன்னெடுக்கப்படுகிறது.

நமது நாட்டைப் பொறுத்தவரையில், யுத்த காலத்திலும் அதற்கு முன்னரும் பின்னரும் பல ஊடகவியலாளர்கள் கடத்தி கொல்லப்பட்டனர்; தாக்கப்பட்டனர்; காணாமலாக்கப்பட்டனர். அவர்களுக்கு எவ்விதமான நீதியும் இன்னும் கிடைக்கவில்லை.

எனினும், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், ஊடகவியலாளர்களை விசாரணைக்கு அழைப்பது, இன்னும் தொடர்ந்துகொண்டுதான் இருகின்றது.

இந்நிலையில், ஊடகத்துறையின் பிரதானிகள், பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள் ஆகியோரை கொழும்பில் மே மூன்றாம் திகதி சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான குழுவினர், அரசாங்கம் தயாரிக்கும் ஒலிபரப்பு அதிகார சபைச் சட்டமூலம், ஊடகங்களை கட்டுப்படுத்தவே தயாராகின்றது. ஊடக சுதந்திரத்துக்கான மரண அடியை எதிர்ப்பது பற்றி, தம்மிடத்தில் பொதுவான கருத்து உள்ளது என்றனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக, புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை உருவாக்குவதன் மூலம், 220 இலட்சம் மக்களையும் பயங்கரவாதிகளாகப் புரிந்துகொள்ளும் ஜனநாயக விரோத ஆணையை எதிர்ப்பது பற்றிய, பொதுவான புரிதலும் எங்களுக்கு உள்ளது என்றனர்.

ஒவ்வோர் அரசாங்கமும் ஊடக சுதந்திரத்தை மீறும் வகையில் சட்டங்களை தயாரிக்கும். ஆகையால், ஜனநாயகத்தின் நான்காவது தூணை பலப்படுத்தி, பாதுகாப்பது அவசியமாகும்.

அத்துடன், நமது நாட்டில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

நிரந்தரமற்ற உலகில் நிஜத்தைத் தேடித் தெரிந்து, தெளிவது அறிவின் மேன்மை. உண்மைகளை அறிவதில் மனிதருக்கு ஆர்வம் அதிகம். ஆனால், அநேகர் ஆவலுடன் அறிய வேண்டிய உண்மை, அடுத்தவர்கள் வீட்டுச் சமாசாரங்களை விருப்பத்துடன் அறிந்து கொள்வதேயாகும்.

தங்கள் வீட்டில் எது நடக்கின்றது என உணராமல், வாழ்க்கையின் உண்மைகளைத் தேடுவது எப்படி?

தங்களைத் தவிர, எவரும் உண்மையானவர்கள் இல்லையென வாதாடும் கூட்டங்களும் உண்டு.

தன்னை உணராமல், தலைவனைத் தேட முடியுமா? இங்கு தலைவன் என்பது, கடவுளைக் குறிப்பிடுவதாகும்.

தவறுகளை விருப்பத்துடன் செய்பவர்கள் கூட, கடவுள் தங்களைக் கவனிப்பது இல்லை என்றும் கூறுவதுண்டு.

தங்களைப் பற்றிய தகவல்களை உணர்ந்தாலே போதும்! வாழ்க்கையில் நல்ல மாற்றங்கள் வரும். தொடர்ந்து கண்ணை மூடிக் கொண்டு வாழக்கூடாது. உண்மையுடன் வாழ்க!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ரணில் எனும் ஏமாற்றுக்காரர்



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வு என்பது, 'பாராளுமன்றமே அரசாங்கம்' என்கிற புரிந்துணர்வின் அடிப்படையில் எட்டப்பட வேண்டும். அதைப் புரிந்து கொள்ளாது, தமிழ்க் கட்சிகள் நீண்ட தூரம் பயணிப்பதால் எந்தப் பயனும் இல்லை" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி வெளியிட்டுள்ள காணொலி உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு, பாராளுமன்றத்துக்குள் தீர்வு காணப்பட வேண்டும். அதனை விடுத்து, தீர்வை வெளியில் தேடிக் கொண்டிருக்க முடியாது. அப்படித் தேடுவதாலும் தீர்வு கிடைத்துவிடாது என்றுதான் ஜனாதிபதி கூற விளைகின்றார். அதனால்தான், 'பாராளுமன்மே அரசாங்கம்' என்ற விடயத்தை, புதிதாகக் கண்டுபிடித்தது மாதிரி அவர் குறிப்பிடுகிறார்.

அத்தோடு, தமிழ்க் கட்சிகளை நோக்கி, பாராளுமன்றம் அனுமதிக்காத எதையும் தீர்வாக தன்னிடம் எதிர்பார்க்க வேண்டாம்; அதற்காக, இந்தியாவையோ, மேற்கு நாடுகளையோ துணைக்கு அழைத்து வந்தாலும், அதனால் எந்தப் பயனும் இல்லை என்பதுதான் அவரது உரையின் சாராம்சம்.

சுதந்திர இலங்கையில் இனமுரண்பாடுகளை அதிகம் தோற்றுவித்ததில் பாராளுமன்றத்துக்கு முக்கிய இடமுண்டு. தனிச் சிங்களச் சட்டம், பௌத்தத்துக்கு முதலிடம் தொடங்கி, நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக நூற்றுக்கணக்கான சட்டங்கள் பாராளுமன்றத்துக்கு உள்ளேயே நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன.

நாட்டில் 70 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் சிங்கள மக்கள். அந்தப் பெரும்பான்மையை, ஆட்சி அதிகாரத்துக்காக இனவாத, மதவாத அரசியலாக மாற்றியது, பாராளுமன்றத்துக்குள் இருந்த அரசியல்வாதிகள். அவர்களிடம் நீதி கேட்பது என்பது, 'சாத்தானை வேதம் ஓதக் கேட்பதற்கு ஒப்பானது.

பௌத்த மேலாதிக்க சக்திகளும் அவர்களின் ஏவல் பிள்ளைகளாக செயற்பட்ட தென்இலங்கை சக்திகளும், அதிக தருணங்களில் பாராளுமன்றத்தை தங்களின் மேலாதிக்க ஆக்கிரமிப்பு அரசியலை முன்னெடுப்பதற்கான அங்கிகரிக்கப்பட்ட அமைப்பாகவே கருதி வந்திருக்கின்றது. அந்த நிலை, இப்போதும் அப்படியேதான் இருக்கின்றது.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து, அரசாங்கத்தை நோக்கி கேள்வி எழுப்பினால், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை நோக்கி, "நீங்கள் புலிப் பயங்கரவாதிகள்" என்று பேசுமளவுக்குத்தான், அதன் கண்ணியம் இருக்கின்றது.

அப்படிப்பட்ட ஓர் அரங்குக்குள் நின்றுகொண்டு, தமிழ் மக்களுக்கான தீர்வைக் காண வேண்டும் என்று கூறுவதை, 'வடிகட்டிய நரித்தனம்' என்றுதான் அடையாளப்படுத்த வேண்டும்.

மாற்றாக, தீர்வின்றித் தொடரும் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் அர்ப்பணிப்போடு வெளிப்படுத்தப்பட்ட செய்தி என்று, யாரும் நம்ப வேண்டியதில்லை.

ராஜபக்ஷர்களின் அரசியல் என்பது வெளிப்படையானது. தமிழ் மக்கள், தங்களின் அரசியல் பிரச்சினைகள் பற்றி பேசிக்கொண்டு, ஆட்சியாளர்களிடம் வரத் தேவையில்லை; வந்தாலும் எந்தப் பயனும் இல்லை என்பதுதான் ராஜபக்ஷர்களின் நிலைபபாடு. அப்படியான நிலைமையைத்தான், ராஜபக்ஷர்கள் ஆட்சியில் இருந்த 12 ஆண்டுகளும் நிரூபித்து இருக்கிறார்கள்.

ஆனால், ரணில் ஆட்சியில் இருக்கின்ற அனைத்துத் தருணங்களிலும், அதேவிடயத்தை சாயம் பூசிய வார்த்தைகளினூடாக வேறு வடிவில் கூறியிருக்கிறார்.

"பாராளுமன்றமே அரசாங்கம்; அங்குதான் தீர்வு காணப்பட வேண்டும்" என்பது, அதனை மட்டுந்தான் வெளிப்படுத்துகின்றது. அவர், பாராளுமன்றத்தால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதும், கடந்த சுதந்திர தினத்துக்கு முன்னர், அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுவிடும் என்று அறிவித்தல் விடுத்தார். தமிழ்க் கட்சிகளையும் சில தடவை அழைத்து பேசினார். அங்கு பேசப்பட்ட விடயங்களில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை.

ஏற்கெனவே, அரசாங்கமும் தமிழ் தரப்புகளும் பேசி, கண்ட இணக்கப்பாடுகள், காற்றில் விடப்பட்டவை மாதிரியே, இப்போதும் விடப்பட்டன. இப்போது, ரணில், இந்த வருட இறுதிக்குள், அரசியல் தீர்வைக் கண்டுவிட நினைப்பதாகக் கூறுகிறார். ஆனால், அதற்கான எந்த முனைப்பையும் அவர் சிறிதளவும் வெளிப்படுத்தவில்லை.

மாறாக, கவர்ச்சிகரமான அறிக்கை அரசியலூடாக, விடயங்களைக் கடக்க நினைக்கிறார். அதுவும், 2048 ஆண்டாகும் போது, "நாட்டை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்ற வேண்டும்" என்று கூறுகிறார். இந்தக் கூற்று, தென் இலங்கை மக்களை நோக்கி விடுக்கப்படும், தேர்தல் வெற்றியை நோக்கிய அறைகூவல்!

தமிழ்த் தரப்பை நோக்கி, பௌத்த சிங்கள மேலாதிக்க சிந்தனை கோலொச்சும் பாராளுமன்றத்துக்குள்ளேயே தீர்வு காணப்படும்; அதற்கு இணங்கிக் கொள்ள வேண்டும்; அதைச் செய்யாது, வெளியில் நின்று கூப்பாடுபோடுவதால் பலனில்லை என்ற அறிவிப்பை ரணில் விடுக்கிறார்.

அதே நேரம், சர்வதேசத்தை நோக்கி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்துக்குள், இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண முயற்சிப்பதுதான் 'ஜனநாயக நெறி' என்று அவர் படம் காட்டவும் செய்கிறார். இதன்மூலம், தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற சர்வதேசத்தின் குரல்களைப் புறந்தள்ளவும் முடியும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்ற ஒற்றை இலக்கோடு இருக்கும் ரணிலுக்கு, தன்னை நோக்கிய புற அழுத்தங்கள் இருப்பதில் விருப்பமில்லை. ராஜபக்ஷர்களை விரட்டியடிக்க வீதிக்கு வந்த மக்களை, தான் அதிகாரத்தை அடையும் வரையில் ஆதரித்த ரணில், அதிகாரத்துக்கு வந்ததும் படை பலத்தைக் கொண்டு ஓடவிடத் தொடங்கினார்.

அவரின் உண்மை முகம் அதுதான்! அது, அதிகாரங்களை குறிவைக்கும் அரசியல்வாதிகள் கொண்டிருக்கும் ஒரே முகம்! அவரின் முகத்துக்கு ஜனநாயக முலாம் பூசிக் கொண்டு, மாற்றத்தின் சக்தி என்று பார்ப்பது எல்லாம் களவாணித்தனமாகும்.

சுதந்திர இலங்கையில், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, தந்தை செல்வா தொடங்கி இன்றைக்கு இரா. சம்பந்தன் வரையில், போராடித் தோற்ற வரலாறுதான் பதிவாகி இருக்கின்றது. ஐக்கிய தேசிய கட்சியும், அதிலிருந்து முளைத்த சுதந்திரக் கட்சியும், அதன் பின்னால் இந்தக் கட்சிகளில் இருந்து விரிந்த பொதுஜன பெரமுனவும், ஐக்கிய மக்கள் சக்தியும், தமிழர் பிரச்சினையை ஒரே கண்ணோட்டத்தில் மாத்திரமே அணுகி வந்திருக்கின்றன.

பௌத்த மேலாதிக்க சிந்தனைகளுக்கு அப்பால் நின்று, தமிழ் மக்களையோ, அவர்களின் பிரச்சினைகளையோ அணுகுவதற்கு அந்தக் கட்சிகள் ஒருபோதும் தயாராக இருப்பதில்லை. ஏனெனில், இந்தக் கட்சிகளின் அடிப்படைச் சிந்தனை என்பது, மகாவம்ச மனநிலையில் இருந்து கட்டமைக்கப்படுவது. அது, தமிழ் மக்களை வில்லன்களாக சித்திரிக்கும் அரசியலின் நீட்சி.

அத்தோடு, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கண்டால், ஆட்சியை அடைவதற்கான இலகுவான கருவியாக இதுவரை கையாண்டுவந்த இனவாத அரசியல் எனும் தீயை, கையில் ஏந்த முடியாது. தேர்தல் வெற்றிக்கு எந்தவித உழைப்பும் இல்லாமல் இனவாத, மதவாத அரசியலைத் தூண்டினால் இலகுவான வெற்றியைக் கண்டுவிடலாம் என்பதுதான், இலங்கை அரசியலின் ஒரே வரலாறு!

நிலைமை அப்படியிருக்க, அந்தக் கருவியை கைவிடுவதற்கு எந்த அரசியல்வாதியும் தயாராக இருக்கமாட்டார்கள். அதனால்தான், அவ்வப்போது தமிழர் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய பேச்சுகளுக்கு புற அழுத்தங்களால் இணங்கினாலும், தென் இலங்கை ஆட்சியாளர்கள் அதை எப்படியாவது தட்டிக்கழிக்கவே செய்திருக்கிறார்கள்.

ரணிலும் இப்போது அதைத்தான் செய்கிறார். 'பாராளுமன்றமே அரசாங்கம்' என்கிற வார்த்தை ஜாலம், தட்டிக்கழிப்பதை நோக்கியதுதான். ஆனால், அதில் அவர் செப்படிவித்தையொன்றைக் காட்ட விளைகிறார். அதாவது, பாராளுமன்றத்துக்குள் தீர்வைக்கான முயற்சிக்கிறேன். ஆனால், ராஜபக்ஷர்களினால் சூழப்பட்ட பாராளுமன்றம் அதற்கு இணங்கவில்லை. அதனால், தன் மீது குற்றமில்லை என்று சர்வதேசத்தின் கேள்விகளில் இருந்து நழுவ நினைக்கிறார்.

அத்தோடு, பாராளுமன்றத்துக்குள் தீர்வு என்று பேசினால், தமிழ்த் தரப்புகள், சிறிதுகாலம் கூச்சல் போட்டுவிட்டு ஓய்ந்துவிடும். அதனால், அவர்களின் தொல்லையும் இல்லை. ஏனெனில், கடந்த காலத்தில் தமிழர் பிரச்சிகைளுக்கான தீர்வு குறித்த எந்த முயற்சிகளையும் பாராளுமன்றம் அனுமதித்ததேயில்லை. மாறாக, பிரச்சினைகளை அதிகரிக்கவே செய்திருக்கின்றது. அதனால், தமிழ்க் கட்சிகள் கத்திக் களைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பது வெளிப்படையான செய்தி.

ரணில் என்கிற பழுத்த அரசியல்வாதி, தனது இறுதிக் காலத்தில் கிடைத்த ஜனாதிபதி என்கிற அதியுச்ச அதிகாரத்தை இறுகப் பற்றிக் கொள்வதற்காக, ஒட்டுமொத்த நாட்டையும், சர்வதேசத்தையும் ஏமாற்றி ஆட நினைக்கிறார்.

அவ்வளவுதான். அதைத் தவிர்த்து அவரது உழைப்பாளர் தினச் செய்தியில் எதுவும் இல்லை.

## கடிதங்கள்

### துவசம் செய்யும் யானைகள்

முல்லைத்தீவு, வன்னிவிளாங்குளம், வடகாடு ஆகிய பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதுடன் பயிர் செய்கைகளையும் அழித்து வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள வன்னிவிளாங்குளம், வடகாடு ஆகிய பகுதிகளில், கடந்த நான்கு தினங்களாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த நான்கு நாள்களாக, காட்டு யானைகளின் தொல்லை, குறித்த வன்னிவிளாங்குளம், வடகாடு ஆகிய இடங்களில் அதிகரித்துக் காணப்படுவதுடன், இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள தோட்டச் செய்கைகள் மற்றும் பயன் தருமரங்களையும் அழித்து வருகின்றன.

இவ்வாறு யானைகள் மாலை ஆறு மணிக்குப் பின்னர், பயிர் செய்கை மேற்கொண்டுள்ள பகுதிகளுக்குள் புகுந்து, அட்டகாசம் செய்கின்றன. வடகாடு, கொல்லவிளாங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புகளுக்குள் மே மாதம் முதலாம் திகதி மாலை வேளையில் புகுந்த யானைகள், பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளன.

குறித்த பகுதியில், தென்பகுதியில் உள்ள யானைகளே இவ்வாறு இறக்கி விடப்பட்டுள்ளன என்றும், இவ்வாறு இறக்கி விடப்பட்ட யானைகள், உணவின்றியே ஊர்மனைகளுக்குள் புகுந்து அட்டகாசம் செய்கின்றன எனவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

யது பாஸ்கரன்



விவசாயிகளின்

# ஆதங்கம்

பேரின்பராஜா சபேஷ்











"விவசாயத்தில், ஒரு காலத்திலும் இவ்வாறான நெருக்கடியை நாங்கள் எதிர்நோக்கியதில்லை. அரசாங்கம் எந்தவித நட்டஈடும் எமக்குத் தரவில்லை. உரம் மற்றும் கிருமிநாசினி தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு போன்ற காரணங்களால், பயிர்ச்செய்கைகைக் கைவிட்டு, வேறு தொழிலைத் தேட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது".

"இரண்டரை முதல் மூன்று மாதங்கள் காத்திருந்து அறுவடை செய்தால், சில சமயம் முதலிட்ட பணமே கிடைப்பதில்லை. விவசாயத்தில் இடைத்தரகர்கள், தமக்கு ஏற்றாற்போல் விலைகளை நிர்ணயிக்கின்றனர். அதிலும் நாமே பாதிக்கப்படுகிறோம். எமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துவதற்கு, காலாகாலமாக சோளன் பயிர்செய்கையில் ஈடுபட்டுவந்த நாம், உரம் மற்றும் கிருமிநாசினி தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு காரணமாக, சோளன் பயிர்ச்செய்கையைக் கைவிட்டு, வேறு தொழிலைத் தேட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது" எனக் கூறுகிறார் வவுனியா, செட்டிக்குளம் கிராமத்தில் சோளன் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவரும் 62 வயதுடைய எஸ். கணபதிப்பிள்ளை.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுகளால் விவசாயச் செய்கையில் ஈடுபடுவோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயத்தை மாத்திரமே நம்பி வாழ்வாதாரத்தைக் கொண்டுசெல்லும் அவர்கள், மாற்றுத் தொழிலாக எந்தவொரு தொழிலையும் முன்னெடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இரசாயன உரம், கிருமிநாசினி இறக்குமதி தடை, எரிபொருள் விலை அதிகரிப்பு போன்ற சமகால பொருளாதார நெருக்கடிகளால், விவசாயிகளின் வாழ்க்கை இரட்டிப்பு இருட்டுக்குள் தள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கம் சேதனப்பசளை ஊக்குவிப்புத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ள போதிலும், அது எந்தளவுக்கு வெற்றியளிக்கும் என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. இவ்விடயம் தொடர்பாக, பல்வேறு மாவட்டங்களிலும் விவசாயிகளிடம் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்போது அவர்கள் தமது ஆதங்கங்களை வெளியிட்டனர்.

"அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சேதனப் பசளை, எங்களுக்கு எவ்வித பலனையும் வழங்கவில்லை. அரசாங்கத்தின் 'சுபீட்சத்தின் நோக்கு' சேதன மற்றும் பசுமை விவசாயத் திட்டத்தின் கீழ், இரசாயன உரம் மற்றும் கிருமிநாசனி இறக்குமதித் தடை காரணமாக, சோளன் பயிர்ச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது" என வவுனியா, ஓமந்தை பிரதேசத்தில் சோளன் பயிர் செய்கையில் ஈடுபட்டுவரும் துளசி ஆதங்கப்படுகிறார்.

**இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி இறக்குமதி தடை காரணமாக, மரக்கறி செய்கையாளர்களின் வருமானத்தில் 30 சதவீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன் செய்கையாளர்களின் இலாபத்திலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது**

"முன்பு 25 ஆயிரம் ரூபாய் செலவில், ஓர் ஏக்கர் காணியில் சோளன் பயிரிட்டோம். இப்போதைய பொருளாதார நெருக்கடி, விலைவாசி அதிகரிப்பு காரணமாக, ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். முன்பு ஏக்கருக்கு 5,000 ரூபாய் உழவுக்குக் கொடுத்திருந்தோம். டீசல் விலையேற்றம் காரணமாக 28,000 ரூபாய் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம்" என்கிறார் சதாசிவம்.

வவுனியா மாவட்டம் உழுந்து மற்றும் சோளன் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற வளமான மணல் உள்ளது. 2020 இற்கு முன்னர், அதிகளவில் செய்கை பண்ணப்பட்டு வந்த சோளன் 2021-2022ஆம் ஆண்டு பெரும்போகத்தில் 267 ஹெக்டெயர் நிலத்திலும், அவ்வாறே 5,468 ஹெக்டெயர் நிலத்தில் உழுந்தும் செய்கை பண்ணப்பட்டதாக மாவட்ட விவசாயத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி ஆகியவற்றின் இறக்குமதிகளை, அரசாங்கம் தடை செய்ததன் காரணமாக, பல உப உணவு செய்கையாளர்கள், சோளன் செய்கையை கைவிட்டுள்ளனர். இதனால், சோளனுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டு கேள்வியும் அதிகரித்து காணப்படுகிறது.

"கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில், 1,500 ரூபாய்க்கு பெறப்பட்ட உரம், இப்போது கறுப்புச் சந்தையில் 24,000 ரூபாயாக அதிகரித்துள்ளது. இவ்வாறு விலை உயர்வு மற்றும் தட்டுப்பாடு காரணமாக, பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட பலர், முதலிடுவதற்கு பணம் இல்லாமல் செய்கையில் ஈடுபடுவதையே கைவிடும் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்" எனவும் சதாசிவம் தெரிவிக்கின்றார்.

இதுபோன்று, வவுனியா மாவட்டத்தில் உழுந்து செய்கையில் ஈடுபட்டவர்களும் கிருமிநாசினி இறக்குமதி தடை மற்றும் விலையுயர்வு காரணமாக, பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக விவரிக்கிறார், செட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த எஸ். தனலட்சுமி.

"65,000 ரூபாய் செலவில் ஓர் ஏக்கரில் உழுந்து பயிரிட்டு, மூன்று மாதங்களில் 20 ஆயிரம் ரூபாய் நட்டமடைந்துள்ளேன். கடந்த காலங்களில், ஓர் ஏக்கருக்கு சராசரியாக 600 கிலோ கிராம் விளைச்சலைப் பெற்ற நாங்கள், தற்போது சராசரியாக 150 கிலோ கிராம் உழுந்தையே பெற்றுள்ளோம்" எனத் தனது மனக் குமுறலை தனலட்சுமி வெளியிட்டார்.

பொருளாதார நெருக்கடியால் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவு, நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையுமே பாதித்துள்ள நிலையில், மத்திய மாகாணத்திலும் இது தொடர்பாக ஆராய விளைந்தோம்.

நுவரெலியாவில், பத்து ஆண்டுகளுக்கு மேலாக லீக்ஸ் செய்கையில் ஈடுபட்டுவருபவர் 42 வயதுடைய உதயன்ஷி மேனகா. சிங்கள இனத்தைச் சேர்ந்த இவர், மூன்று ஏக்கர் காணியில் பயிர் செய்து வந்துள்ளார்.

"2020 ஆண்டுக்கு முன்பு, 10 இலட்சம் ரூபாய் முதலீடு செய்தால், கூடுதலான இலாபத்தைப் பெற முடியும். ஆனால், 2020 ஆண்டின் பின்பு, இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி இறக்குமதித் தடை, விலைவாசி அதிகரிப்பின் காரணமாக 20 இலட்சம் ரூபாய் வரை முதலீடு செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். சந்தையில் மரக்கறி விலையில் தளம்பல் நிலையே காணப்படுகிறது. எங்களிடம் ஒரு கிலோ கிராம் 100 முதல் 150 ரூபாய் வீதமே மொத்தமாக வாங்குகிறார்கள். சிலசமயம், 50 ரூபாய்க்கும் கொடுக்கும் நிலை ஏற்படும். பயிரிட்டு நான்கு மாதங்கள் காத்திருக்கும் எமக்கு, தற்போதைய சூழ்நிலையில் ஒரு கிலோ கிராம் 250 ரூபாய்க்கே விற்க வேண்டும். ஆனால், அப்படி யாரும் வாங்குவதில்லை. இந்தச் சூழ்நிலை தொடர்ந்தால், நட்டமடைந்து மரக்கறி செய்கையை கைவிடும் நிலையே ஏற்படும்" என்று அவர் தெரிவிக்கின்றார்.

**இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி இறக்குமதி தடையை அரசாங்கம் அமல்படுத்தினாலும் கறுப்பு சந்தையில் அதிக விலைக்கு அவை விற்பனை செய்யப்பட்டுள்ளதை பல விவசாயிகளின் குரல்கள் உறுதிப்படுத்தியுள்ளன**

"நாட்டில் கொரோனா தாக்கம் ஏற்பட்டு, முழுநாட்டிலும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட போது, நாங்கள் எவ்வித தடையுமின்றி மரக்கறியை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்தோம். இரசாயன உரத்தைத் தடை செய்ததன் காரணமாகவே, மரக்கறிச் செய்கையில் நட்டமடைந்து உள்ளேன். எங்களது தங்க நகைகளை அடகு வைத்தே, யூரியா வாங்கினோம். எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை மரக்கறி செய்கையைத் தவிர, வேறு எந்தத் தொழிலும் செய்ய முடியாது. நாங்கள் பரம்பரை பரம்பரையாக மரக்கறி செய்கையை பண்ணிவருகிறோம். ஒரு காலத்திலும் இவ்வாறான நெருக்கடியை நாங்கள் எதிர்நோக்கியதில்லை. அரசாங்கம் எந்தவித நட்டஈடும் தரவில்லை. பயிர்களுக்கான விதைகள் மட்டுமே வழங்கினார்கள். அவை சரியாக முளைக்கவில்லை" என, நுவரெலியாவில் கரட் செய்கையில் ஈடுபட்டு வரும் தினேஸ் லங்கா, தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

"இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி இறக்குமதி தடை காரணமாக, மரக்கறி செய்கையாளர்களின் வருமானத்தில் 30 சதவீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. உற்பத்திச் செலவு தற்போது இரண்டு மடங்காக அதிகரித்துள்ள நிலையில், செய்கையாளர்களின் இலாபத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. விவசாயத் திணைக்களத்தால் பயிர்களுக்கான விதை மாத்திரமே வழங்கப்படுகிறது" என, மத்திய மாகாண விவசாயத் திணைக்கள பிரதி பணிப்பாளர் தினேத் பிரபாஷ் ரங்கொட கூறினார்.

இதேவேளை, சிறுதோட்டச் செய்கையாளர்கள் மாத்திரமின்றி நெற்செய்கையாளர்களும் இந்தப் பொருளாதார நெருக்கடியால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணம், நெல் வேளாண்மை செய்கை பண்ணும் வளமான மண்ணையும் நீர்ப்பாசனக் குளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. நாட்டின் அரிசி தேவையில் 30 சதவீதமான பங்களிப்பை கிழக்கு மாகாணம் வழங்குகிறது.

ஆனால், அரசாங்கத்தால் சேதனப் பசளை ஊக்குவிப்பு மற்றும் இரசாயன கிருமிநாசினி தடை திட்டத்தின் மூலம், நெல் விளைச்சல் பெரும் பின்னடைவைக் கண்டுள்ளது.

'பன்னாடை' என்று கூறப்படும் சேறுபடா செல்லன் புல்லினம், வயல்களில் வேளாண்மைக்கு மேல் படர்ந்து வேளாண்மையை மூடியதன் காரணமாக, விளைச்சல் குறைவாகவே கிடைத்தது. கடந்த காலங்களில் இந்தப் புல்லினம் வளரும்போது, இரசாயன கிருமிநாசினி தெளித்து அவற்றை அழித்து விடுவோம். தற்போது கிருமிநாசினி இல்லாததன் காரணமாக, எனது வாழ்வில் ஒரு போதும் காணாத நட்டத்தை பெரும்போகத்தில் அடைந்துள்ளேன்" என்றார் மட்டக்களப்பு, பள்ளத்துவெளி விவசாய கண்டத்தில் 52 வருடங்களாக நெல் வேளாண்மை செய்துவரும் 71 வயதுடைய சோமசுந்தரம் இராசலிங்கம்.

வெள்ள அனர்த்தம் மற்றும் வரட்சி போன்ற காரணங்களால் வேளாண்மைச் செய்கை பாதிக்கப்பட்டாலும், சாதாரணமாக ஏக்கருக்கு 35 முதல் 45 மூடைகள் வரை அறுவடை செய்யும் வயலில் சேறுபடா செல்லன் புல்லினம் படர்ந்ததன் காரணமாக, 15 முதல் 20 மூடைகள் வரையில் நெல் அறுவடை செய்யப்பட்டு, பெரும் நட்டத்தை எதிர்கொண்டதாகவும் அவர் கூறினார்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் 2022 பெரும்போகத்தில் 71 ஆயிரத்து 184.41 ஹெக்டேயர் நெல் வேளாண்மை செய்கை பண்ணப்பட்டு சுமார் 2 இலட்சத்து 49 மெற்றிக்தொன் விளைச்சல் எதிர்பார்க்கப்பட்டது. ஆரம்பத்தில், உரம் மற்றும் கிருமிநாசினி தட்டுப்பாடு காரணமாக 5,000 ஹெக்டேயர் வேளாண்மை கைவிடப்பட்டது. மஞ்சள் நோய் தாக்கம் காரணமாக 10 சதவீதமான வேளாண்மை பாதிக்கப்பட்டது" என்கிறார் கமநல அபிவிருத்தித் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட பிரதி ஆணையாளர் கிருஸ்ணன் ஜெகநாத்.

இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி இறக்குமதி தடையை அரசாங்கம் அமல்படுத்தினாலும் கறுப்பு சந்தையில் அதிக விலைக்கு அவை விற்பனை செய்யப்பட்டுள்ளதை பல விவசாயிகளின் குரல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

விவசாயிகளுக்கு மாற்று வழியை ஏற்படுத்தாமல், இறக்குமதி தடையை அரசாங்கம் விதித்தது பாரிய தவறென, விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் போன்ற திணைக்களங்களிலிருந்து தம்மை அடையாளப்படுத்த விரும்பாத அதிகாரிகள் சாடுகின்றனர்.

# அமைச்சரவை முடிவுகள் சில...




## புரிந்துணர்வு ஒப்பந்தம்

சுங்கத் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்குரிய இருதரப்பினர்களுக்கிடையில், ஒத்துழைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கில் இலங்கை சுங்கத்திற்கும், அவுஸ்திரேலியா தேச எல்லைகள் படையணிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்காக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, இரு நாடுகளிலும் நடைமுறையிலுள்ள சட்டங்கள், ஒழுங்குவிதிகள், நடவடிக்கை முறைகள் மற்றும் கொள்கைகளுக்கமைய, சுங்க நடவடிக்கைகளுக்குரிய ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவிகளை பலப்படுத்தல், ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல் போன்றவையே முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கங்களாகும். அந்த யோசனைக்கு அங்கிகாரம் கிடைத்துள்ளது.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்

லக்சம்பர்க் அரச வெளிவிவகார மற்றும் ஐரோப்பிய விவகாரங்கள் அமைச்சு மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கும் இடையில் இருதரப்பு ஆலோசனைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த ஒப்பந்தத்தின் மூலம் இருதரப்பு ஒத்துழைப்புகள் தொடர்பாக அரசியல், பொருளாதார, வணிக, விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் கலாசாரம் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கிடையிலான இருதரப்புத் தொடர்புகளை ஊக்குவித்தல், பலப்படுத்தல் மற்றும் விரிவாக்கம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கைக்கும் லக்சம்பர்க்கும் இடையில் இராஜதந்திர தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு, 50 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு இரு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத்திலான இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட அங்கிகாரம் கிடைத்துள்ளது.

## சட்டத்தைத் திருத்தம் செய்தல்

சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படைச் சட்டமூலத்தை மையமாகக் கொண்டு திருத்தங்களை மேற்கொள்ளுமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையால் 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் 73 ஆவது ஆண்டறிக்கை 2023.04.27 ஆம் திகதி நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. நிதிச் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளுக்கமைய ஆண்டறிக்கை கிடைக்கப்பெற்று 14 நாள்களுக்குள் குறித்த அறிக்கையை நிதி விடயதானத்திற்குப் பொறுப்பான அமைச்சர், பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## ஆசியான் பிராந்திய ஒன்றியம்

ஆசியான் பிராந்திய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடான இலங்கை, 2022-2024 காலப்பகுதிக்கான அணுவாக்கல் பெருக்காமை மற்றும் ஆயுதக் குறைப்பு பற்றிய இடைக்கால கூட்டத்தொடரின் இணைத்தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தது. 2023 மே மாதம் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் ஆசியான் பிராந்திய ஒன்றியத்தின் அங்கத்தவர்களுக்கான 14 ஆவது இடைக்கால கூட்டத்தொடரை நடத்துவதற்கு ஒழுங்குபடுத்த அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## முகாமைத்துவம் செய்தல்

மஹிந்த ராஜபக்ஷ தேசிய டெலி சினிமா பூங்காவை, அரச தனியார் பங்குடமை முறைமையின் கீழ் முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை 2023.02.27 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அங்கு அதுபற்றி விடயங்களை ஆராய்ந்து, அமைச்சரவைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக குறித்த முன்மொழிவை,நந அரச தனியார் பங்குடமையில் தேசிய முகவராண்மை நிறுவனத்திற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

## எல்லையை திருத்தம் செய்தல்

2022 நவம்பர் மாதம் பாராளுமன்றத்தால் அங்கிகாரம் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளை வெளியிடுகின்ற அங்கிகரிக்கப்பட்ட எல்லை 5,000 பில்லியன்களாகும். 2023 மார்ச் மாதம் இறுதியாகும் போது செலுத்தப்பட வேண்டிய மொத்த திறைசேரி முறிகள் மீதி 4,636 பில்லியன் ரூபாய்களாகும்.

2023 ஆம் ஆண்டுக்கான 4,979 பில்லியன் ரூபாய்கள் அண்ணளவான கடன் பெறல் எல்லைக்கான பாராளுமன்ற அங்கிகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. அவற்றில் 3,526 பில்லியன் ரூபாய் உள்ளூர் மூலங்களிலிருந்தும் மற்றும் 1,453 பில்லியன் ரூபாய் வெளிநாட்டு மூலங்களிலிருந்தும் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் கடன் பெறல் பிரதானமாக திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி பிணையங்கள் வெளியிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும். அதற்கமைய, திறைசேரி முறிகளை வெளியிடுவதற்காக தற்போது நிலவுகின்ற உயர்ந்தபட்ச எல்லையைத் திருத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, திறைசேரி முறிகளை வெளியிடுகின்ற அங்கிகரிக்கப்பட்ட எல்லையை 6,000 பில்லியன் ரூபாய் வரைக்கும் அதிகரிப்பதற்கும் அங்கிகாரம் வழங்கியுள்ளது.

உக்ரேன்

# கண்ணிவெடிகளை கண்டுபிடிக்க நூதன முயற்சி



உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி, உக்ரேன் மீது ரஷ்யா கடந்த ஒரு வருட காலமாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

அதே சமயம் உக்ரேனும் ரஷ்யா மீது பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது. இப்போரில் இருதரப்பில் இருந்தும் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

அதுமட்டுமல்லாது, கார்கீவ் மாகாணத்திலிருந்து பின்வாங்கிய ரஷ்ய படைகள் அங்கு ஏராளமான கண்ணிவெடிகளைப் புதைத்துவிட்டுச் சென்றுள்ளன.

இதனால், விவசாயிகள் பலர் வேளாண்மை பணிகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளனர். விதைக்கும் பருவம் நெருங்கி இருப்பதால், விவசாயி ஒருவர் இதற்கு மாற்று வழியைக் கண்டுபிடித்துள்ளார்.

ரஷ்ய படைகள் விட்டுச்சென்ற பீரங்கியின் கவசத்தை கழற்றி, தனது டிரக்டர் மீது பொருத்தி, அதனை ரிமோட் கண்ட்ரோல் மூலம் வயல்வெளியில் இயக்கும் அந்த விவசாயி, அதன் மூலம் கண்ணி வெடி ஏதேனும் புதைக்கப்பட்டுள்ளதா என சோதனையிட்டு வருகிறார். இது அந்நாட்டு மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

பிரித்தானியா




## அதிரடி அறிவிப்பை வெளியிட்ட கேட்பரி; அதிர்ச்சியில் மக்கள்

பிரித்தானியாவைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற சொக்லெட் நிறுவனமான கேட்பரி, பக்டீரியா தொற்று அச்சுறுத்தல் காரணமாக பிரித்தானியாமுழுவதும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஆறு சொக்லெட் வகைகளை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது.

லிஸ்டீரியோ தொற்று எனப்படும் உணவு மூலம் பரவும் பாக்டீரியா, அசுத்தமான உணவை உட்கொள்வதால் ஏற்படுகிறது. கர்ப்பிணிகள், 65 வயதுக்கு மேற்பட்டோர் இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டால் மிகவும் ஆபத்து என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கேட்பரியின் தயாரிப்புகளில் லிஸ்டீரியோ தொற்றுப் பரவும் அபாயம் ஏற்பட்டதால், ஆறு சொக்லெட் வகைகளை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது.

மேலும் யார் வாங்கியிருந்தாலும் அதனை உட்கொள்ளாமல் வாங்கிய இடத்திலே ஒப்படைத்து மீண்டும் பணம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதுடெல்லி

## பாலியல் விவகாரம்; மனம் திறந்தார் வினேஷ்



இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவர் பிரிஜ் பூஷண் சரண் சிங்கிற்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு விவகாரத்தில் மல்யுத்த வீரர், வீராங்கனைகள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுதவிர, கூட்டமைப்பின் நிதி தவறாக பயன்படுத்தப்படுவது மற்றும் தவறான நிர்வாகம் உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தியும் இப்போராட்டம் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய வினேஷ் போகத், "நீண்ட காலம் அதிகாரம் மற்றும் பதவியைத் தவறாகப் பயன்படுத்தி வரும் நபரை எதிர்த்து நிற்பது என்பது மிக கடினம்.

ஜந்தர் மந்தரில் போராட்டம் தொடங்குவதற்கு முன்பு அதிகாரி ஒருவரை முதன்முறையாக சந்தித்து பேசினோம். ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

3 முதல் 4 மாதங்களுக்கு முன், ஜந்தர் மந்தரில் போராட்டத்தில் ஈடுபடும் முன்பு, அதிகாரி ஒருவரை சந்தித்து அவரிடம், வீராங்கனைகள் எப்படி பாலியல் துன்புறுத்தல் செய்யப்படுகின்றனர் மற்றும் மனதளவில் சித்திரவதை செய்யப்படுகின்றனர் என்று ஒவ்வொரு விடயம் பற்றியும் கூறினோம். எனினும் அவர்கள் அதனையும் கண்டுகொள்ளவில்லை.

எவ்வித நடவடிக்கையும் இல்லாத நிலையிலேயே இப் போராட்டத்தை முன்னெடுத்தோம்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



## தெருநாயால் சிறுவன் உயிரிழப்பு

உத்தரபிரதேச மாநிலம் பரேலியில் உள்ள சிபி கஞ்ச் பகுதியில் தெருநாய்கள் கடித்ததில் 12 வயதான சிறுவனொருவன் உயிரிழந்துள்ளான்.

கானா கவுந்தியா கிராமத்தில் நேற்று (03) அயான் (வயது 12) என்ற சிறுவன் தனது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது திடீரென தெருநாய்கள் சிறுவர்களைத் தாக்கியது. சிறுவர்கள் நாய்களுக்கு பயந்து ஓடினர். சிறுவன் அயான் ஓடும்போது தரையில் விழவே, தெருநாய்கள் அவன் மீது பாய்ந்து கடித்தன.

அப்போது அவ்வழியாகச் சென்றவர்கள், சிறுவனை நாய்களிடமிருந்து மீட்டனர். உடனடியாக அவர்கள் சிறுவனை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். இருப்பினும் சிறுவன் அயான் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். நாய்கள் தாக்கியதில் மேலும் ஒரு குழந்தை காயமடைந்தது.

பரேலியில் தெருநாய்கள் குழந்தைகளைத் தாக்குவது இது முதல் முறையல்ல. இரண்டு மாதங்களுக்கு முன்பு வீட்டிற்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த மூன்று வயது சிறுமி தெருநாய்கள் தாக்கியதில் உயிரிழந்திருந்தார்.

இஸ்ரேல்

## இஸ்ரேலுக்காக கட்டாரை உளவு பார்த்த இந்தியா



இஸ்ரேலுக்காக கட்டாரை உளவு பார்த்ததாக 8 இந்தியர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய கடற்படையின் முன்னாள் அதிகாரிகளான இவர்கள், கடந்த ஆறு மாதங்களாக சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

ரேடாரால் கண்காணிக்க முடியாத தொழில்நுட்பம் கொண்ட இத்தாலிய நீர்மூழ்கிக் கப்பலைப் பெறும் திட்டத்திற்கு ஆலோசனை வழங்கும் Dahra Global Technologies and Consulting Services நிறுவனத்திற்காக இவர்கள் பணியாற்றியதாகக் கூறப்படுகிறது.

இரண்டாம் கட்ட விசாரணை இம்மாதம் நடைபெற இருப்பதாகவும், குற்றம் நிரூபிக்கப்பட்டால் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியா


## இ-சிகரெட்டுக்குத் தடை

இளைஞர்களின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு, இ-சிகரெட்களுக்குத் தடை விதிக்கப்போவதாக அவுஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது.

புகை பழக்கத்திலிருந்து மக்களை விடுவிக்கும் என விளம்பரப்படுத்தப்பட்ட இ-சிகரெட்களில் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள், புற்றுநோய், சுவாசக்கோளாறு போன்ற பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துவதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

மேலும், இ-சிகரெட் பயன்படுத்துவோர் நாளடைவில் புகை பழக்கத்திற்கும் அடிமையாக வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியாவில், பதின்ம பருவத்தினர் அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையே இ-சிகரெட் புகைக்கும் பழக்கம் அதிகரித்திருப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.




இங்கிலாந்து பிறீமியர் லீக்

# செல்சியை வீழ்த்திய ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற செல்சி உடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாக, மார்டின் ஒடெகார்ட் இரண்டு கோல்களையும், கப்ரியல் ஜெஸூஸ் ஒரு கோலையும் பெற்றனர். செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை நொனி மடுக்கே பெற்றிருந்தார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 78 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் காணப்படுகின்றது. 76 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும், 65 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும், 63 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன. இதில், நியூகாசில் யுனைட்டெட் ஒரு போட்டி அதிகமாகவும், ஆர்சனல் இரண்டு போட்டிகள் அதிகமாகவும் விளையாடியுள்ளன.



ஐ.பி.எல்:

## குஜராத்தை வென்ற டெல்லி

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரில், அஹமதாபாத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான குஜராத் டைட்டான்ஸுடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: டெல்லி

டெல்லி: 130/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அமன் ஹக்கீம் கான் 51 (44), அக்ஸர் பட்டேல் 27 (30), ரிபால் பட்டேல் 23 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் ஷமி 4/11 [4], மோஹித் ஷர்மா 2/33 [4], ரஷீட் கான் 1/28 [4], நூர் அஹ்மட் 0/20 [4])

குஜராத்: 125/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹர்டிக் பாண்டியா ஆ.இ 59 (53), அபினவ் மனோஹர் 26 (33), ராகுல் டெவாட்டியா 20 (07) ஓட்டங்கள். பந்துவீச்சு: இஷாந்த் ஷர்மா 2/23 [4], கலீல் அஹ்மட் 2/24 [4], குல்டீப் யாதவ் 1/15 [4], அக்ஸர் பட்டேல் 0/24 [4])

போட்டியின் நாயகன்: மொஹமட் ஷமி இந்நிலையில், ஹைதராபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸை சண்றைசர்ஸ் ஹைதரபாத் எதிர்கொள்ளவுள்ளது.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

## றியல் சொஸைட்டிடம் தோற்ற றியல் மட்ரிட்



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், றியல் சொஸைடட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் தோற்றது.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 82 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பார்சிலோனா உள்ளது. 68 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் றியல் மட்ரிட்டும், 66 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும், 61 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் றியல் சொஸைடட்டும் காணப்படுகின்றன. இதில் அத்லெட்டிகோ மட்ரிட் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில்

## இரண்டாமிடத்துக்கு முன்னேறிய பக்கர் ஸமன்

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு பாகிஸ்தானின் பக்கர் ஸமன் முன்னேறியுள்ளார்.

நியூசிலாந்துக்கெதிரான முதலிரண்டு போட்டிகளில் 297 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே ஸமன் இவ்வாறு முன்னேறியுள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2. பக்கர் ஸமன், 3. றஸி வான் டர் டுஸென், 4. ஷுப்மன் கில், 5. இமாம்-உல்-ஹக், 6. டேவிட் வோர்னர், 7. விராட் கோலி, 8. குயின்டன் டி கொக், 9. றோஹித் ஷர்மா, 10. ஸ்டீவ் ஸ்மித்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜொஷ் ஹேசில்வூட், 2. மொஹமட் சிராஜ், 3. மிற்செல் ஸ்டார்க், 4. ட்ரெண்ட் போல்ட், 5. மற் ஹென்றி, 6. ரஷீட் கான், 7. அடம் ஸாம்பா, 8. முஜீப் உர் ரஹ்மான், 9. ஷகிப் அல் ஹஸன், 10. ஷகீன் ஷா அஃப்ரிடி.



தேசிய ரீதியில் கூடைப்பந்தாட்டத்தில்

## வெற்றி பெற்ற வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு

■ வ. சக்தி

இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனத்thaal ஒழுங்கு செய்யப்பட்ட கனிஷ்ட தேசிய கூடைப்பந்தாட்ட (பிரிவு-2) தொடரில் தேசிய ரீதியில் சம்பியனான மட்டக்களப்பு மாவட்ட 23 வயதுக்குட்பட்ட கூடைப்பந்தாட்ட அணியினரைக் கௌரவிக்கும் நிகழ்வானது, மட்டக்க ளப்பு தனியார் விடுதி ஒன்றில் அண்மையில் இடம்பெற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 4 மே 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.